**இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இலக்கம் 2757 எஸ்ஆர்ஐ) 2014**

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 யூலை 22 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையின் (ஏ) ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கிழக்கு மாகாணத்தின் மூதூர் நகரப் பகுதிகளில் உள்ள 52,000 மக்களுக்கு பாதுகாப்பான நீரினையும், நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இயலளவை உயர்த்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 624.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.5 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 485.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.3 மில்லியன் அல்லது 78 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 139 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 1.2 மில்லியன் அல்லது 22 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2015 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 2. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பாரத்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 55.8 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி கொடுப்பனவு மீதான மாதாந்த அறிக்கை 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம்

பந்தியின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 3 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான ஒப்பந்தங்களை ஏற்ற ஒப்பந்தகாரர்கள் கேள்விகளை வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த வேண்டுகை செயற்திட்ட நடவடிக்கைகளுடன் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரரால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செய்ற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போது பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 4.30 | 485.94 | 93.47 | 73.48 | 3.88 | 472.71 |
| இலங்கை அரசாங்கம் | 1.20 | 139.00 | 10.00 | 8.60 | 1.26 | 167.32 |
| மொத்தம் | 5.50 | 624.94 | 103.47 | 82.08 | 5.14 | 640.03 |

ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு முதலியவற்றில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். பௌதீக இலக்குகளை மேவி செயற்திட்டத்தால் அத்தகைய விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டும் அமுலாக்கப்பட்டும் இருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

மூதூரில் தலைமை வேலைகளின் நிர்மாணம், மூல நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் பொருட்கள் கொள்வனவிற்கு தேவைப்பட்ட வசதியளிப்பதே இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. கொள்வனவு நடவடிக்கைகள் தலைமை வேலைகளின் நிர்மாணம், மூல நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு பொறி போன்றன பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்த திகதியிலிருந்து 11 மாதங்களிற்கு மேலான தாமதத்துடன் 2014 நவம்பர் 28 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணத்திற்கான அளவீட்டுப் பட்டியலில் செய்யப்பட்ட ரூபா 3.6 மில்லியன் தொகையான ஒதுக்கீடு இரண்டு உழவு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான தலைமை வேலைகளின் பூர்த்தியாக்கல், மூல நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு பொறி போன்றவற்றிற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 4.2 மில்லியன் கிரயத்தில் இரண்டு வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டது.

(ஆ) ரூபா 4.4 மில்லியன் பெறுமதியுடைய முரண் கட்டளைகளின் தவறான கணிப்பீடு காரணமாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 600,000 மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2009 யூன் 23 இல் வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் கைசாத்திட்ட ஆலோசனை ஒப்பந்தம் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளின் அமுலாக்கலிற்கு முன்னர் காலாவதியாகியிருந்தது. மேலும், கொள்வனவு ஒப்பந்த அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவு ஏற்பாடுகளிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில், புதிய புரிந்துணர்வு விஞ்ஞாபனம் 2013 மே 20 இல் உள்ளூர் ஆலோசனையாளர் ஒருவருடன் கைச்சாத்திடப்பட்டதுடன் ரூபா 8 மில்லியன் தொகையான கட்டணம் அவற்றிற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. மேலும், அவற்றின் மீது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2 மில்லியன் தொகையான மேந்தலைக் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிர்மாண ஒப்பந்தம் தலைமை வேலைகளின் நிர்மாணம், மூல நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு பொறி என்பவற்றிற்காக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ரூபா 23.6 மில்லியன் மொத்தக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 5.8 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் மாத்திரம் 2015 ஏப்ரல் 30 இல் கொள்வனவு செய்யப்பட்டது.

## 3.4 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 6.2 மில்லியன் தொகை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய மானியங்களில் தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் பொதுத் திறைசேரியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் இதன்படி கணக்கீட்டுச் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது.